பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 10 புதன்கிழமை (24.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 177

# விசேட தூதர் போவர் சனியன்று

# வன்னியில் புலிகளுடன் சந்திப்பு

## கொழும்புக்கு வரும் சொல்ஹெய்ம் இம்முறை கிளிநொச்சிக்குச் செல்லார்

கொழும்பு, மே 24

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான அமைதி முயற்சிகளில் அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேயின் விசேட தூதுவர் ஹான்ஸன் போவர் இன்று கொழும்பு வருகின்றார். அவர் சனியன்று கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவார்.

இதேவேளை, அனுசரணைப் பணிக்குப் பொறுப்பான நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் நாளை மறுதினம் கொழும்பு வருகின்றார். ஆனால், அவர் தமது இந்த முறை விஜயத்தின்போது கிளிநொச்சிக்குச் செல்லமாட்டார் எனத் தெரிகின்றது.

விசேட தூதுவர் போவரின் கிளிநொச்சி விஜயம் தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் கிளிநொச்சி சென்றிருந்தார். நேற்று அவர் அங்கு புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

கொழும்பு வரும் நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் இம்முறை கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்தித்துப் பேசுவதற்கு விரும்பினார் என்றும் -

(02ஆம் பக்கம் பார்க்க)

## கழுத்து வெட்டிய நிலையில் இளைஞனது சடலம் மீட்பு!

வலி.வடக்கு, மே 24

கழுத்துவெட்டப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவரது சடலம் மல்லாகம் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது. இவரது கொலைக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை.

மல்லாகம், நீதிமன்ற வீதியைச் சேர்ந்த சிவஞானம் சஞ்சீவன் (வயது - 25) என்ற வாலிபரே உயிரிழந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மல்லாகம் சந்திக்கு அண்மையாக உள்ள சேர்ச் வீதியில் உள்ள தோட்டம் ஒன்றில் இருந்து இவரது சடலம் கண்டெடுக்கப்பட்டது.

கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் சடலம் காணப்பட்டது.

மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் சம்பவ இடத்தில் சடலத்தைப் பார்வையிட்டு, வாக்குமூலங்களைப் பெற்றார்.

சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக

(08ஆம் பக்கம் பார்க்க)

## மின் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

மறுசீரமைப்பு என்ற போர்வையில் இலங்கை மின்சாரசபை தனியார் மயமாக்கப்படப் போகின்றது எனக் குற்றஞ்சாட்டி இலங்கை மின்சாரசபையின் கூட்டுத் தொழிற்சங்கங்கள் நேற்றுக் கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியிருக்கின்றன.

அதேசமயம், இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்புச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் தொடர் வேலை நிறுத்தமொன்று நடத்தப்படுமென்றும், இதனால் ஏற்படும் மின்விநியோகத்தடைக்கு தாம்பொறுப்பாளிகள் அல்லரென்றும் இலங்கை மின்சார சபையின் கூட்டுத்தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்று அறிவித்திருக்கின்றனர்.

## ஐரோப்பிய ஒன்றியத் தடையை புலிகள் எவ்வாறு கருதுவார்கள்?

### அதில்தான் எதிர்காலம் தங்கியுள்ளது என்கிறார் ஹன்ஸன் போவர்

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளுக்குத் தடை விதிக்கும் பட்சத்தில் அதை இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் எவ்வாறு எடுத்துக் கொள்ளப் போகிறார்கள் என்பதைப் பொறுத்தே இலங்கையின் சமாதான முயற்சிகளின் அடுத்த கட்ட நகர்வு இருக்கும் என்று நோர்வேயின் சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்ஸன் போவர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவில் ஒளிபரப்பாகும் தமிழ்த் தொலைக்காட்சி இணையமான 'ரி.ரி.என்.' இற்குத் தகவல் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வார இறுதியில் நோர்வே யின் அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்முடன் இலங்கைக்குச் செல்லவுள்ளேன். கிளிநொச்சிக்கும் சென்று தற்போதுள்ள சூழ்நிலை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடவுள்ளேன்.

இலங்கை அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட முக்கிய அரசியல் தலைவர்

(08ஆம் பக்கம் பார்க்க)

## சர்வ மதத்தலைவர்கள் நேற்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை தென்னிலங்கையின் பௌத்த மதத் தலைவர்கள் நேற்று கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சு நடத்தியிருக்கின்றனர்.

அமரபுர நிக்காயவைச் சேர்ந்த வண. பண்டித மதம்பாகம அஸாஜி தேரர் தலைமையில் சர்வ மதத் தலைவர்கள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சியிலுள்ள புலிகளின் சமாதானச் செயலகத்தில் முற்பகல் 11 மணிக்கு இந்

(08ஆம் பக்கம் பார்க்க)

## சமஷ்டிக்கு இணங்கி ஜே.வி.பி. புலிகளுக்கு இரகசிய செய்தியாம்!

### புதிய கதையை அவிழ்க்கிறது ஐ.தே.கட்சி

கொழும்பு, மே 24

"சமஷ்டித் தீர்வுக்கு இணங்கி அது தொடர்பான விடயங்களை அரச சமாதானச் செயலகம் ஊடாகப் புலிகளுக்கு இரகசியமாக அறிவித்திருக்கும் ஜே.வி.பி., இந்தத் தகவல்கள் வெளிவந்து விடக்கூடா என்பதற்காகத்தான் ஐக்கிய தேசியக் கட்சி மீது அபாண்டமான பழிகளைப்போட ஆரம்பித்திருக்கிறது."

"போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் விடுதலைப்புலிகளின் தலைவர்கள் கூறிவரும் கருத்துகள் போன்றவற்றிற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டைக் கேட்பதில் அர்த்தமில்லை. தற்போதைய அரசாங்கத்திடமே அதுபற்றிக் கேட்கவேண்டும். ஏனெனில், விடுதலைப் புலிகளுடன் செய்து

(02ஆம் பக்கம் பார்க்க)

## 2 நாட்களில் 314 அகதிகள் தமிழகம் வந்து சேர்ந்தனர்

இராமேஸ்வரம்,மே24

கடந்த இரு தினங்களில் மாத்திரம் இலங்கையிலிருந்து 314 பேர் அகதிகளாக இராமேஸ்வரம் வந்துள்ளனர். நேற்றுமுன்தினம் திருகோணமலை மாவட்டத்தின் திருக்கடலூர், உப்புவெளி மற்றும் 4ஆம் கட்டைப் பகுதிகளைச் சேர்ந்த 37 பெண்கள், 13 சிறுவர்கள் உட்பட 80 பேர் தனுஷ்கோடி, அரிச்சல்முனை, இராமேஸ்வரம் கடற் கரைகளில் வந்திறங்கினர்.

அதேவேளை, நேற்றும் திருகோணமலையைச் சேர்ந்த 52 குடும்பங்களின் 234 பேர் படகுகள் மூலம் இராமேஸ்வரம் கடற்கரையில் வந்திறங்கினர்.

கடந்த ஜனவரியிலிருந்து இதுவரை இலங்கையிலிருந்து 1,639 பேர் அகதிகளாக தமிழகம் வந்துள்ளனர். ஆனால், ஒரே நாளில் கூடுதலான அகதிகள் வந்தமை நேற்றுதான் முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## தமிழர்கள் மீதான வன்முறை தொடர்ந்தால் தனிநாடு நோக்கி அவர்கள் தள்ளப்படுவர்

### ஐ.தே.கட்சி எம்.பிக்கள் மத்தியில் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே 24

வடக்கு - கிழக்குத் தமிழர்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவை வழங்காதபோதிலும் அந்த மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கிறது. அப்பாவித் தமிழர்கள் மீது வன்முறைகள் தொடர்ந்து தொடுக்கப்படுமானால் தமிழர்கள் தனி நாடொன்றை நோக்கியே தள்ளப்படுவர்.

- இவ்வாறு தெரிவிக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க. நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று நடைபெற்ற ஐ.தே.கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின் போதே ஐ.தே.க. தலைவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பாதுகாக்கும் பிரதான பொறுப்பு அரசாங்கத்திடம் இருக்கவேண்டுமென வலியுறுத்

(08ஆம் பக்கம் பார்க்க)

## தீவகத்தின் பாதுகாப்புக் குறித்து வேலணையில் நேற்று மாநாடு

வேலணை,மே24

அல்லைப்பிட்டிப் படுகொலைச் சம்பவத்தையடுத்து தீவுப்பகுதியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான மாநாடு ஒன்று நேற்று முற்பகல் வேலணையில் நடைபெற்றது.

கடற்படையின் வடபகுதி கட்டளைத் தளபதி தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் கடற்படையின் புங்குடுதீவு, நயினாதீவு, அல்லைப்பிட்டி, காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை பிரதேச பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர்கள் வேலணை மற்றும் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கடற்படையினரின் ஒழுங்கமைப்பில்

(02ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ பாரம்பரியங்களைப் பாதுகாத்த பெருமைக்குரியவர் மங்கையர்க்கரசி

## நல்லை ஆதீன முதல்வர் அனுதாபம்

யாழ்ப்பாணம்,மே24

சைவ பாரம்பரியங்களை போற்றிப் பாதுகாத்த பெருமைக்குரியவர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம். இவ்வாறு தெரிவித்துள்ளார் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.

யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினரும் சிறந்த ஆன்மீகப் பேச்சாளருமான திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலத்தின் மறைவிற்கு அனுதாபம் தெரிவித்து விடுத்த செய்திக் குறிப்பிலேயே ஆதீன முதல்வர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்திக்குறிப்பில்:-

எமது மண்ணில் மகத்தான பணிகள் ஆற்றிவந்த மங்கைர்க்கரசி திருச்சிற்றம்பலம் அவர்களின் பிரிவுசெய்தியறிந்து மிகுந்த கவலையடைகின்றோம். சைவசமயப் பாரம்பரியங்களைப் போற்றிப் பாதுகாப்பதில் முன்னின்று தொண்டாற்றிய பெண்மணி. பல்கலைக்கழகப் பேரவை முதல் பல நிறுவனங்களில் பணியாற்றிய அம்மையார் சொல்வன்மைமிக்க சிறந்த பேச்சாளர். சைவ சமய மாநாடுகள், விழாக்களில் முதன்மைப் பங்கு வகித்த அம்மையாரை சைவ உலகம் இழந்துவிட்டது.

அம்மையாரது ஆன்மா சிவகதியடையப் பிரார்த்தித்து அமைகிறோம் - என்றுள்ளது.

**சிவத்தமிழ்ச் செல்வி அனுதாபம்**

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி விடுத்த அனுதாபச் செய்தியில்,

சைவப் பாரம்பரியத்தில் தோன்றி, தன் வாழ்நாள் முழுவதும் சைவநெறிக்காவும் ஆசிரியத்துவத்துக்காகவும் உழைத்த உத்தமப் பெண்மணி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம். அவரது பிரிவுச்செய்தியறிந்து மிகவும் வேதனையடைகின்றேன்.

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் பரம்பரை பரம்பரை வாரிசாக விளங்கிய அம்மையார், சிறந்த ஆன்மீகப் பேச்சாளர், ஆளுமைமிக்க அதிபர், இராமநாதன் கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவி.

இடம்பெயர்வின் அனர்த்த சூழ்நிலையில் எமது துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை இராமநாதன் கல்லூரியில் தங்கவைத்து அரவணைத்து ஆற்றிய தொண்டு மறக்க இயலாது. இராமநாதேஸ்வர ஆலயம் முதல் சைவ மங்கையர் கழகம் போன்ற அறப்பணிகளில் ஓயாது உழைத்த இவரது இழப்பு எமது மண்ணுக்குப் பேரிழப்பு என்பதில் ஐயமில்லை. அன்னாரது ஆத்மா சாந்திக்காக துர்க்கையம்பாளைப் பிரார்த்தித்து அமைகிறேன் - என்றுள்ளது.

**செஞ்சொற்செல்வரின் அனுதாபச் செய்தி**

செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் விடுத்த அனுதாபச் செய்தியில்,

சைவத்தமிழ் மரபுகாத்த சான்றோர் வழியில் நின்று இறக்கும்வரை பணிசெய்தவர் மங்கையர்க்கரசி அம்மையார் அவர்கள் ஆசிரிய கலாசாலையில் பலநூறு ஆசிரிய மாணவருக்கு நல்லறிவு புகட்டியவர்.

ஆங்கில மொழியிலும், அருந்தமிழிலும் மிகுந்த பாண்டித்தியமுடைய இப்பெண் மணியின் ஆற்றலைப் பாராட்டாதவர்கள் இல்லை.

இராமநாத வள்ளலின் இலட்சியங்களை காக்கவேண்டுமெனக் கூறி அவரது தர்ம சொத்துக்களைக் காப்பாற்றுவதில் அயராது பாடுபட்ட தொண்டுள்ளம்படைத்த பெண் மணியை நம்மண் இழந்துவிட்டது - என்றுள்ளது.

# வட்டக்கச்சியில் கணனிப்பயிற்சி

வட்டக்கச்சி,மே24

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பசுமைப் புரட்சிக்கான ஓ.ஜி.ஆர். நிறுவனம் ஆசிரியர்களுக்காக ஒருமாதகால கணனிப் பயிற்சியை நடத்தவுள்ளது.

பாடசாலை விடுமுறையையொட்டி வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணையில் நடத்தப்படவுள்ள இப்பயிற்சிநெறியில் இணையவிரும்பும் ஆசிரியர்கள் தமது பதிவுகளை உடன் வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இப்பயிற்சியில் மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவர் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பதிவுசெய்தவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 9மணிக்கு வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் நடைபெறும் எனவும் தெரிவித்தனர். (405)

# ரயர் வெடித்த சத்தத்தால் நெல்லியடியில் பதற்றம்!

கரவெட்டி,மே24

நெல்லியடிச் சந்திப் பகுதியில் நேற்று நண்பகல் லொறியின் ரயர் ஒன்று பாரிய சத்தத்துடன் வெடித்ததையடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

ரயர் வெடித்த சத்தத்தையடுத்து வர்த்தக நிறுவனங்கள் அனைத்தையும் மூடிவிட்டு உரிமையாளர்கள் ஓட்டமெடுத்தனர். இதனையடுத்து வீதிகளில் கண்டபடி ஓடியவர்களை இராணுவத்தினர் தடுத்துநிறுத்தினர் எனவும், பின்னர் ஒருசில கடைகளே மீண்டும் திறக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (70)

# வெட்டுக்காயத்திற்கு இலக்காகி பெண் மரணம்

வடமராட்சி,மே24

அல்வாய் வடக்கு, சமாணத்துறையில் இளம் பெண்ணொருவர் வெட்டுக்காயத்திற்கிலக்காகி மரணமாகியுள்ளார்.

அதேயிடத்தைச்சேர்ந்த பிரதீபன் ஜெகசோதி (வயது 24) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார். சடலம் பருத்தித்துறை வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (173)

# பாடசாலை மாணவர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,மே24

யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் தரம் ஒன்று முதல் நான்கு வரையிலான வகுப்புகளில் கல்விகற்கும் மாணவர்களையும் வித்தியாலய ஆசிரியர்களையும் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலைக்குச் சமூகமளிக்குமாறு வித்தியாலய அதிபர் கேட்டுள்ளார்.

* * *

யாழ்ப்பாணம்,மே24

அச்சுவேலி மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் தரம் 9, 10, 11 ஆகியவற்றின் மாணவர்களையும் அவ்வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களையும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் ஒன்றுகூடுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

கல்லூரியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குக் தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட விடுமுறை வகுப்புகள் நடைபெறுவதாகவும் அதிபர் தெரிவித்துள்ளார்.

* * *

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் கல்விபயிலும் தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரை கல்விபயிலும் மாணவர்களை எதிர்வரும் 29ஆம் திகதி காலையில் பாடசாலைக்குச் சமூகம் தருமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

* * *

யாழ்ப்பாணம்,மே24

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் தரம் 4, 5 இல் கல்வி பயிலும் மாணவர்களையும் ஆசிரியர்களையும் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலைக்குச் சமூகம் தருமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

* * *

யாழ்ப்பாணம்,மே24

நல்லூர் சென். பெனடிக்ற் வித்தியாலயத்தில் கல்விபயிலும் தரம் ஒன்று தொடக்கம் 4 வரையான மாணவர்களுக்கான விசேட வகுப்புகள் இன்று புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இன்று தொடக்கம் எதிர்வரும் 5ஆம் திகதிவரை காலை 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை வகுப்புகள் நடைபெறும் என வித்தியாலய அதிபர் தெரிவித்துள்ளார்.

* * *

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கல்விபயிலும் தரம் 9, 10, 11 மாணவர்களுக்கான விடுமுறைக்கால வகுப்புக்கள் இன்று புதன்கிழமையிலிருந்து விடுமுறைக் கால வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சகல பாடங்களும் காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணிவரை நடைபெறும் எனவும் சகல மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறும் பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணம்,மே24

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்கும் தரம் ஒன்று தொடக்கம்-4 வரையான மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகள் நடைபெற்றுவருகின்றன.

கடந்த 22ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 31ஆம் திகதிவரை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை வகுப்புகள் நடைபெறும் என பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

* * *

யாழ்ப்பாணம்,மே24

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் தரம் 9, 11இல் கல்விகற்கும் மாணவர்களையும் ஆசிரியர்களையும் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரிக்கு சமூகமளிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

* * *

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் தரம் 11இல் கல்விபயிலும் மாணவர்களை எதிர்வரும் 28ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கல்லூரிக்கு வருகைதருமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

# உரும்பிராயில் மிதிவெடி அகற்றிய அலுவலர் காயம்

யாழ்ப்பாணம்,மே24

உரும்பிராய்ப் பகுதியில் மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர் ஒருவர் நேற்றுக் காயமடைந்தார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த ஆர்.துஷாந்தன் (வயது 25) என்பவரே காயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (15-78)

# பவள் தடம்புரண்டதில் சிப்பாய் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம்,மே24

படையினர் பயணஞ்செய்த பவள் ஒன்று நேற்று முற்பகல் கடை ஒன்றுக்குள் புகுந்து தடம்புரண்டதில் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

படையினருடன் வீதியில் பயணித்த பவள், திடீரென கடையொன்றுக்குள் புகுந்து உடனடியாகவே தடம்புரண்டது என்றும், அதனுள் சிக்கிய சிப்பாய் மிகுந்த பிரயத்தனத்தின் மத்தியில் மீட்கப்பட்டார் என்றும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

# சமஷ்டிக்கு இணங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை இந்த அரசு ஜெனீவாப் பேச்சுகளின்போது ஏற்றுக் கொண்டிருக்கிறது.''

- இவ்வாறு தெரிவித்து நேற்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸவிற்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்திருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க.

போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாட்டை அறிவிக்கக்கோரி ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ கடந்த வாரம் ஐ.தே.கவுக்குக் கடிதமொன்றை அனுப்பியிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் தாம் அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கின்றார் ஐ.தே.க. பிரதிப் பொதுச் செயலாளர். அவர் அந்தக் கடிதத்தில் மேலும் கூறியுள்ளதாவது:-

சமஷ்டித் தீர்வின் மூலம் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் பேச்சுக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுவந்த ஜே.வி.பியினர், இப்போது புலிகள் இயக்கத்திற்கு இரகசியத் தகவல்களை அனுப்பி அவர்களுடன் இணக்கப்பாட்டுக்கு வர முயற்சிக்கின்றனர். இதனை மூடி மறைப்பதற்காகப் பல புதிய யுக்திகளை ஜே.வி.பி. கடைப்பிடிக்கின்றது. நோர்வே விசேட சமாதானப் பிரதிநிதியை ஸ்பெயினில் மிக இரகசியமாகச் சந்தித்த அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் பாலித கொஹோன்ன, ஜே.வி.பி.யின் நிலைப்பாட்டை நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாகப் புலிகளுக்கு அறிவித்திருக்கின்றார்.

நான்கு நிபந்தனைகளின் கீழ் சமஷ்டித் தீர்வுக்கு ஜே.வி.பி. இணங்கியிருப்பது புலிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

* இலங்கையில் ஒரு வெளிநாட்டு அமைச்சே இருக்கவேண்டும்.

* ஒரே நிதி அமைச்சே இருக்கவேண்டும்.

* வடக்கு - கிழக்கில் அனைத்து நியமனங்களும் மாகாண அரசிற்கு வழங்கப்படும் அதேசமயம், அரச படைகளுக்கு மேலதிகமாக வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவமும், பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்படவேண்டும்.

* இறுதித் தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது 'சமஷ்டி' என்ற சொற்பதம் பயன்படுத்தப்பட வேண்டும்.

- இவையே அந்த நான்கு நிபந்தனைகளாக முன்வைக்கப்பட்டிருக் கின்றன.

நிலைமை இப்படியிருக்க, ஜே.வி.பி. இப்போது வேண்டாத விவாதங்களை நடத்திக் கொண்டிருக்கிறது.

ஜெனீவாப் பேச்சுகளில் இலங்கை அரசு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டிருப்பதால் ஜே.வி.பி. இந்தக் கேள்விகளை அரசிடமே கேட்கவேண்டும்.

அதைவிடுத்து இப்படி நடந்துகொண்டு ஜே.வி.பி. தனது வங்குரோத்து அரசியலையே வெளிக்காட்டுகின்றது.

- இவ்வாறு [illegible] சுட்டிக்காட்டியுள்ளார் ஐ.தே.க பிரதிப் பொதுச் செயலாளர். (க)

# தீவகத்தின் பாதுகாப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீவுப்பகுதியின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பொதுமக்கள் வாகனங்களில் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இந்த மாநாட்டில் கருத்துத் தெரிவித்த கடற்படையின் வடபகுதிக் கட்டளைத் தளபதி,

தீவுப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் பாதுகாப்புக்கு கடற்படையினர் பொறுப்பாக இருப்பர். அல்லைப்பிட்டியிலிருந்து இடம்பெயர்ந்தவர்களும் மீளவும் வந்து தங்கள் வதிவிடங்களில் குடியமரமுடியும். பொதுமக்களுக்கு எந்தவிதமான இடையூறுகளும் ஏற்படுத்தக்கூடாதென்று கடற்படையினருக்கு உரிய பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

தீவுப்பகுதியில் கடந்தமாதங்களில் கடற்படையினர்மீது பல தாக்குதல்கள் நடத்தப்பட்டன. எனினும், கடற்படையினர் மிகுந்த பொறுமையைக் கடைப்பிடித்தனர். அத்தகைய பொறுமை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படும்.

தீவுப்பகுதிப் போக்குவரத்தில் பொதுமக்கள், அரச ஊழியர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மீதான சோதனைகள் குறைக்கப்படும். அதுகுறித்தும் உரியவர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளேன் - என்றார்.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த வண.பிதா அமலதாஸ் அடிகளார் -

அல்லைப்பிட்டி மக்கள் தமது சொந்த விருப்பத்தின் பெயரிலேயே இடம்பெயர்ந்திருந்தனர். அவர்களை இடம்பெயர்ந்து செல்லுமாறு எவரும் வற்புறுத்தவில்லை. தீவகத்தில் இடம்பெற்ற குமுதினிப் படுகொலை, புங்குடுதீவுப் படுகொலை என்பவற்றையடுத்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்று கடற்படையினர் உறுதிமொழி வழங்கினர். ஆனால், அதன்பின்னர் அல்லைப்பிட்டிப்படுகொலை இடம்பெற்றுள்ளது. இந்த நிலையிலேயே பொதுமக்கள் இடம்பெயரும் முடிவை எடுத்தனர் என நான் நினைக்கின்றேன்.

எனவே, இனிவரும் காலங்களில் இத்தகைய நிலைமைகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பது கட்டாயமானது - என்றார்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட பொதுமக்கள், கடற்படையினரின் கெடுபிடிகளால் தீவகத்தில் தாம் அனுபவித்துவரும் இன்னல்களைப் பட்டியல்படுத்தி உரையாற்றினர்.

பிற்பகலுக்குப் பின்னர் வீதிகளில் நடமாட முடியவில்லை. வர்த்தக நிலையங்களை மாலை 5 மணியுடன் மூடிவிடவேண்டிய நிலை, பேக்கரிகளில் இரவில் தங்கி நின்று பாண் தயாரிப்பில் ஈடுபடமுடியாத நிலை, பொதுமக்கள் பாதுகாப்புக் கருதி ஒன்றுகூடிப் பொது இடமொன்றில் இரவுப் பொழுதைக் கழிக்கவேண்டியுள்ளது எனப் பல்வேறுபட்ட பிரச்சினைகளைப் பொதுமக்கள் கடற்படை அதிகாரியிடம் தெரிவித்தனர். (167)

# விசேட தூதர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழமையாக இத்தகைய சந்திப்புகளின் போது தலைவர் பிரபாகரனுடன் உடனிருக்கும் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம், கிளிநொச்சியில் இல்லாத சமயத்தில் அத்தகைய சந்திப்பு சாத்தியமில்லை என்பது நோர்வேத் தரப்புக்கு புலிகளால் தெரியப்படுத்தப்பட்டது என்றும் - அறிய வந்தது.

இதனால், சொல்ஹெய்ம் தமது கிளிநொச்சி விஜயத் திட்டத்தைக் கைவிட்டு கொழும்புடன் திரும்பத் தீர்மானித்தார் எனவும் கூறப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத் தடை, இணைத்தலைமை நாடுகளின் காட்டமான கண்டனம் என்ற எச்சரிக்கைகள் சர்வதேச மட்டத்தில் புலிகளுக்கு எதிராகக் கிளப்பப்பட்டு வரும் சூழலில், இந்தச் சூறாவளிகள் அடங்கி, முடிவுகள் வரும்வரை அமைதி முயற்சிகளில் ஆக்கபூர்வமான முன்நகர்வுகளைப் புலிகள் தரப்பிலிருந்து எதிர்பார்ப்பது பொருத்தமேயற்றது என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

கொழும்புக்கான நோர்வேத் தூதுவரின் நேற்றைய கிளிநொச்சி விஜயம் மற்றும் சந்திப்புக்களின் பெறுபேறாக புதிய திருப்பம் ஏதும் ஏற்பட்டதற்கான அறிகுறிகள் காணப்படவேயில்லை என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

## அச்சுறுத்தலுக்கு அடங்கார் பிரபா!

இனப்பிரச்சினை விவகாரத்தில் நாடு இக்கட்டில் - ஒரு திருப்பு முனை நிலையில் - சிக்கி நிற்கின்றது.

இருபத்தியைந்து ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றம் ஈழத் தமிழர்களின் போராட்ட சக்தியான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தமது நாடுகளில் தடை செய்யக் கோரும் தீர்மானம் ஒன்றை ஏகமனதாக நிறைவேற்றியிருக்கின்றது. இது குறித்து இறுதி முடிவை ஐரோப்பிய ஒன்றியத்தின் அமைச்சரவை எதிர்வரும் 29 ஆம் திகதி எடுக்கவிருக்கின்றது.

அடுத்த நாள் - அதாவது மே 30ஆம் திகதி - இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமை அமைப்புகள் டோக்கியோவில் சந்தித்து இலங்கை நிலைமை குறித்து ஆராயவிருக்கின்றன.

இந்நிலையில் இலங்கை சமாதான முயற்சிகளுக்கு அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேயின் கொழும்புக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினரைச் சந்தித்துப் பேசியிருக்கின்றார்.

அனுசரணைப் பணிக்குப் பொறுப்பான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஹன்ஸன் போவர் நேற்று ஒஸ்லோவிலிருந்து புறப்பட்டு இன்று கொழும்பு வருகின்றார்.

இதேவைளை, அனுசரணைப் பணியைக் கண்காணிக்கும் நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்மும் நாளைமறுதினம் கொழும்பு வருகின்றார்.

இவர்கள் எல்லோரும் எதிர்வரும் சனிக்கிழமை கிளிநொச்சி சென்று புலிகளின் தலைமையையும் சந்திக்க முயற்சிப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால், புலிகளின் தலைவர் பிரபாகரன் வன்னி வரும் நோர்வே அனுசரணைக் குழுப் பிரதிநிதிகள் போன்றவர்களை அங்கு சந்திப்பாரா? இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அமைதி முயற்சிகளை முன்னெடுப்பது குறித்து இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுடன் பேசுவாரா? - என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன.

ஐரோப்பிய ஒன்றியத் தடை எதிர்வரும் 29 ஆம் திகதி - அதாவது எதிர்வரும் திங்களன்று - இறுதியாகத் தீர்மானிக்கப்படலாம் என்ற அச்சுறுத்தல் ஒருபுறம் -

அடுத்த நாள் கூடும் இணைத் தலைமைகளும் புலிகளுக்கு எதிராகக் காட்டமாகப் பயமுறுத்தும் எச்சரிக்கை அறிக்கையை வெளியிடலாம் என்ற மிரட்டல் மறுபுறம்-

இவற்றுக்கு மத்தியில்தான் - அவை இடம்பெறுவதற்கு இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னர்தான் - ஹன்ஸன் போவரும், சொல்ஹெய்மும் கொழும்பு வந்து, வன்னியில் தலைவர் பிரபாகரனைச் சந்திக்க முயலுகின்றனர்.

புலிகளைத் தடைசெய்வது மற்றும் புலிகளுக்கு எதிராகக் காட்டமான அறிவித்தலை விடுப்பது போன்ற சர்வதேச சமூகத்தின் கடும் நடவடிக்கைகள் என்ற கத்திகளைப் புலிகளின் தலைக்கு மேல் தொங்கவைத்துக்கொண்டு -

அடுத்த ஓரிரு நாள்களில் அது நடக்கும் என்ற அச்சுறுத்தலைப் பின்னணியில் தக்கவைத்துக் கொண்டு -

சர்வதேச சமூகப் பிரதிநிதிகளாக அனுசரணைத் தரப்பான நோர்வேயின் பிரமுகர்கள் புலிகளின் தலைமையைச் சந்திக்க விரும்புகின்றனர்.

அச்சுறுத்தல்கள், அழுத்தம் போன்ற மிரட்டல்களுக்கு அஞ்சி - பயந்து - மிரண்டு - இணங்கி, இசைந்து, அடங்கி, மடங்கி, சுருண்டு போகும் பண்போ, பயமோ உடையவர்கள் அல்லர் புலிகள்.

பின்புலத்தில் அச்சுறுத்தல் பாணி தொக்கி நிற்க, முன்னால் சமரசப் பேச்சுக்கு வரும் தந்திரம் குறித்து நல்ல அனுபவப் பாடம் புலிகளுக்கு உண்டு. இரண்டு, மூன்று லட்சம் அமைதிப் படையினர் ஆக்கிரமித்து நிற்க இந்தியத் தரப்பு கொடுத்த அச்சுறுத்தலையே தூசு என ஊதித் தள்ளியவர்கள் புலிகள்.

. எனவே, 29, 30 ஆம் திகதிகளில் சர்வதேச சமூகத்தின் கணிசமான பகுதி புலிகளுக்கு எதிராகத் திரும்பும் என்ற அச்சுறுத்தலுடன் கூடிய நிலைமை இருக்கையில், அதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னர் அனுசரணைத் தரப்போடு கூடிப்பேசி, அமைதி முயற்சிகளை முன்நகர்த்துவதற்கான ஆக்கபூர்வ முடிவுகளை எடுக்கும் திட்டங்களுக்கு புலிகள் இசைவார்கள் என எதிர்பார்ப்பது அர்த்தமற்றது.

சர்வதேச சமூகம் அச்சுறுத்தும் 29, 30 ஆம் திகதிய மிரட்டல்கள் அரங்கேறி முடிந்த பின்னர் வேண்டுமானால் - தமது சுயமான நிலைப்பாட்டில் நின்று கொண்டு - அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்புக் குறித்து சர்வதேச சமூகத்துடன் சமரசப் பேச்சு நடத்தப் புலிகள் முன்வரலாம்.

அதற்கு முன் அவர்கள் - குறிப்பாகப் புலிகளின் தலைவர் பிரபாகரன் - நோர்வே அனுசரணைத் தரப்பினரின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுவார் என எதிர்பார்ப்பது துர்லபமே.

அச்சுறுத்தி அடக்க முயலும் எத்தனங்களை முறியடிப்பதுதானே பிரபாகரனின் தனிப் பாணி..... ! அது இம்முறையும் நிகழும் என எதிர்பார்க்கலாம்.

# வீரச்சாவடைந்த மூத்த தளபதி ரமணன் கேணல் தர நிலைக்கு உயர்த்திக் கௌரவம்



மட்டக்களப்பு,மே24

சினைப்பர் தாக்குதலில் வீரச்சாவடைந்த விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி ரமணன் கேணல் தரத்துக்கு உயர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து தெரிவிக்கப்பட்டதாவது-

ஸ்ரீலங்காபடைகளின் கோழைத்தனமான தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி ரமணன் அவர்களுக்கு கேணல் என்ற இராணுவ தர நிலையை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் வழங்கியுள்ளார்.

தமிழீழ தாயக விடுதலைப் போரில் கேணல் தர நிலையில் வீரச்சாவைத் தழுவிய நான்காவது தளபதி ரமணன் அவர்களாவார். இவரே மட்டு. மண்ணில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட முதல் கேணல் தர தளபதி என்பது குறிப்பிடத்தக்கது.

1986ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்ட கேணல் ரமணன், இந்தியப் படைகளுக்கு எதிராக மட்டு. - அம்பாறை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதல்களில் தளபதி றீகன் தலைமையிலான அணியில் முக்கிய பங்காற்றியிருந்தார்.

பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயத்தில் அமைந்திருந்த இந்தியப் படைகளின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலை நடத்தி பல்வேறு ஆயுத தளபாடங்களை மீட்டெடுத்து பாராட்டுக்களைப் பெற்ற கேணல் ரமணன் வட தமிழீழத்தில் நடைபெற்ற பல்வேறு இராணுவ நடவடிக்கைகளிலும் பங்கேற்றிருந்தார்.

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவில் நீண்டகாலமாகப் பணியாற்றிய கேணல் ரமணன் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் இராணுவப் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளராகப் பொறுப்பேற்ற பின்னர் ஸ்ரீலங்கா படைகளுக்கு எதிராகவும் தேசவிரோதிகளுக்கு எதிராகவும் பல்வேறு நடவடிக்கைகளை வழி நடத்தியிருந்தார். அத்துடன் தமிழீழத்திற்கு வெளியே நடத்தப்பட்ட நடவடிக்கைகளில் கேணல் ரமணனின் பங்கு முக்கியமானதாக இருந்தது.

மட்டக்களப்பில் 2004ஆம் ஆண்டு பிரதேச வாதம் என்ற பெயரில் தமிழரைக் கூறுபடுத்துவதற்காக மாபெரும் துரோகம் அரங்கேறிய வேளை வன்னிக்கு வந்து தேசத்துரோகத்தை முறியடிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்ட தளபதி ரமணன் பிரதேசவாதம் என்ற நஞ்சினைக் கக்கிய துரோகியை மட்டு. மண்ணிலிருந்து விரட்டியடிப்பதற்கான நடவடிக்கையில் முக்கிய பங்காற்றியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து மாவடி முன்மாரிக்கோட்டத்தின் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட ரமணன் அங்கு விடுதலைப் புலிகளின் இராணுவக் கட்டமைப்புக்களை சீரமைக்கும் பணிகளை சிறப்புடன் மேற்கொண்டதுடன் அப்பகுதி மக்களிற்கு அரசியல் விழிப்புணர்வையும் உண்டாக்கும் பரப்புரை நடவடிக்கைகளையும் சிறப்பாக மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், மட்டு - அம்பாறை மாவட்டங்கள் தனித்தனி இராணுவ நிர்வாக மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்ட பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தின் துணைத் தளபதியாக நியமிக்கப்பட்டு சிறப்பாக பணியாற்றி வந்த நிலையில் வவுணதீவு முன்னரங்கப் பகுதியில் வைத்து எதிரியின் கோழைத்தனமான தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார் என்றுள்ளது.

## ஹெல உறுமயவுக்கும் சிக்கல்!

கொழும்பு,மே24

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியினர் கடந்த வாரம் சிக்கலான ஒரு நிலைமையை எதிர்நோக்கவேண்டியிருந்தது அமெரிக்க அரசின் கீழ் செயற்படும் டி.கே.பி. அமைப்பு ஹெல உறுமயக் கட்சியை (தேசிய ஹெல உறுமய முன்னர் ஹெ உறுமய என அழைக்கப்பட்டது) பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்துள்ளதே இதற்குக் காரணமாகும்.

இதனையடுத்து ஹெல உறுமய தலைவர்களுக்கு நாலா புறங்களிலிருந்து ஈமெயில் தகவல்களும் தொலைபேசிகளும் வந்த வண்ணம் இருந்தன.

அமெரிக்காவின் டி.கே.பி அமைப்பின் பட்டியலின்படி சிறிலங்காவில் நான்கு பயங்கரவாத அமைப்புகள் உள்ளன. அவையாவன விடுதலைப் புலிகள் அமைப்பு, ஈ.பி.டி.பி அமைப்பு, ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பு மற்றும் ஹெல உறுமய அமைப்பு என்பனவாகும்.

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் மணிராசன்குளம் முகாமுக்கு முன்னால் கூடி எதிர்ப்பைத் தெரிவித்தமை மற்றும் கொழும்பில் இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் தாக்குதலை மேற்கொண்டமை ஆகிய சம்பவங்களை அடுத்தே ஹெல உறுமய பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டதாக டி.கே.பி அமைப்புத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தேசிய ஹெல உறுமய தனது கடும் எதிர்ப்பை அமெரிக்காவுக்குத் தெரிவித்துள்ளது. மேலும் நீண்ட கடிதம் ஒன்றையும் அமெரிக்கத் தூதுவருக்கு அனுப்பியுள்ளது. இக்கடிதத்தில் தேசிய ஹெல உறுமயவின் செயலாளர் ஓமல்பே சோபிததேரர் கைச்சாத்திட்டுள்ளார்.

## அரச அலுவலகங்களில் கடமை நேரம் விரைவில் மாற்றம்

நல்லூர்மே24

அரச அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகளுக்கான பணி நேரம் விரைவில் மாற்றப்படவுள்ளது. இதன்படி பாடசாலைகள் காலை 7.30 மணிக்கும் அரச அலுவலங்கள் தற்போதைய நேரத்திலும் பார்க்க அரை மணி நேரம் முன்னதாகவும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று கூறப்படுகிறது.

நேரமாறுதல் குறித்த சுற்றிக்கை விரைவில் சகல அரச திணைக்களங்களுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக அறியப்படுகின்றது. (111)

## கால்நடை வளர்ப்போர் சங்கக் கூட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்தும் நடவடிக்கைகளை தமிழீழ பொருண்மியம் மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

இதில் முதற் கட்டமாக பண்ணையாளர்க்ள், கால்நடை வளர்ப்போர் ஆகியோரை ஒன்று கூட்டி கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக சபைகள் உருவாக்கப்படவுள்ளன.

இதற்கமைய புதுகுடியிருப்பு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு உடையார்கட்டு கமநலசேவை நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து ஒட்டுசுட்டான், துணுக்காய், பாண்டியன்குளம், குமுழமுனை ஆகிய பிரதேசங்களுக்கான கூட்டங்கள் அடுத்த மாதம் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (352)

## வீடமைப்புத் திட்டம் குறித்த ஆட்சேபனையைத் தெரிவிக்கலாம்

பரந்தன், மே 24

முல்லைத்தீவு மாவட்டத்தில் உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்கள் தொடர்பான ஆட்சேபனைகள் இருப்பின் நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் தத்தமது பிரதேச செயலருக்கு அல்லது மாவட்ட அரச அதிபருக்கு தெரிவிக்கலாம்.

இவ்வாறு நேர்ப் திட்டப் பணிப்பாளர் சி.விவஜெயந்தன் தெரிவித்துள்ளார்.

நேர்ப் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் நிதியுடன் 2 ஆம் கட்ட வீடமைப்புத் திட்டம் முல்லைத்தீவு மாவட்டத்திலும் செயற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கெனத் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களின் விவரம் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இவற்றில் மக்களுக்கு ஆட்சேபனை இருப்பின் நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் தெரியப்படுத்தலாம்.

பயனாளிகள் மற்றும் கிராமங்களின் தெரிவில் தவறுகள் ஏற்பட்டிருப்பின் அவை நீக்கப்படும். எனவே, ஆட்சேபனைகளை உடன் தெரிவிக்கலாம் என்றும் திட்டப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (352)

## உதயவாக்கு

நண்பர்களோடு அல்ல, எதிரிகளோடுதான் சமாதானம் செய்து கொள்ள வேண்டும்.

- நெல்சன் மண்டேலா.

## நாளை

வைகாசி 11
வியாழக்கிழமை
25.05.2006
திதி : திரயோதசி
பிற்பகல் : 02.07
நட்சத்திரம் : அச்சுவினி
முற்பகல் : 09.25
சுபநேரம் : 07.22 - 08.52
ராகுகாலம் : 01.22 - 02.52

## தடைப்பட்டிருந்த பரீட்சைகள் பல்கலையில் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே24

யாழ்.பல்கலைக்கழகத்தின் தடைப்பட்ட பரீட்சைகள் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன என பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்தார்.

கலைப்பீட முதலாம், இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் (மீள் பரீட்சைகள் உட்பட) எதிர்வரும் 29ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன.

நான்காம் வருட மாணவர்கள் ஆய்வுக் கட்டுரையை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் மூன்றாம், இரண்டாம் வருட, இரண்டாம் அரையாண்டுக்கான நடனம், சங்கீதம், சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 29ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன.

• மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு அறிமுறைப் பரீட்சைகள் அடுத்த மாதம் 12ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன.

நான்காம் வருட மாணவர்கள் தமது ஆய்வுக் கட்டுரையை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

செய்முறைப் பரீட்சைகள் தொடர்பாக மாணவர்கள் தத்தமது துறைத் தலைவர்களைத் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை எதிர்வரும் 29ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

சகல பரீட்சார்த்திகளும் தத்தமது பீடங்களில் திருத்தியமைக்கப்பட்ட பரீட்சை அட்டவணைகளைப் பார்வையிடலாம் எனப் பதிவாளர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசீகர தோற்றத்திற்கு

**சந்தனாலேப**

(குளிர்ச்சி தரும் ஆயுள்வேத மேல் பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மராஞ்சள், குங்குமப்பட்டை,
கஸ்தூரி, மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுள்வேத ஒளடதங்களின்
கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச் சுற்றி
கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி
பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு,
சருமம் சுருங்குதல், பிளவுபடுதல் போன்ற சரும நோய்களைப்
பூரணமாகக் குணப்படுத்தும்.
சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விரத்தை நீக்கி, சருமத்தை
சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.




யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்

“சிவா நறுமணப் பூங்கா”

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.Phone: 222 2567

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA SRI LANKA AYY PRO NO: REG.NO A/L 250

(F-49201) (38-11-15)

# தேவையானால் கொழும்பு மாநகரசபைக்கு மீண்டும் தேர்தலைச் சந்திக்க ஐ.தே.க. தயார்!

## பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு மாநகரசபை நிர்வாகத்தைக் கொண்டு நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் வழங்கியுள்ள ஆணையை அரசு குழப்ப முற்படுமாயின் இன்னுமொரு தேர்தலைச் சந்திக்க நாங்கள் தயாராகவே இருக்கிறோம்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கரு ஜயசூரிய.

நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு கருஜய சூரிய மேலும் கூறியதாவது:

நடந்து முடிந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் உறுதியான வெற்றியைத் தந்துள்ளனர். அரசாங்கத்தின் மீதும், அதன் நேச அணிகள் மீதும் மக்கள் கொண்டுள்ள விரக்தி இத் தேர்தலில் நன்கு தெளிவாகிவிட்டது.

கொழும்பு மாநகரசபைக்கான தேர்தலில் பல்வேறு சவால்களையும் தாண்டி சுயேச்சைக் குழுவில் ஐக்கிய தேசியக் கட்சி பெருவெற்றியீட்டியுள்ளது. இப்போது அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு மாநகர நிர்வாகத்தை முன்னெடுக்க நாம் ஆலோசித்து வருகிறோம்.

மக்களின் ஆணையை செயற்படுத்தும் எமது நடவடிக்கையை குழப்புவார்களாயின் கொழும்பு மாநகரசபைக்காக இன்னுமொரு தேர்தலைச் சந்திக்கத் தயாராகவே இருக்கிறோம்.

- இப்படிக் கூறினார் ஐ.தே. கட்சிப் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய.

(க)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 28 * 07 * 1915



உதிர்வு 24 * 04 * 2006

### அமரர் குமாரசாமி கனகரட்ணம்
(பத்தர்)

கடந்த 24.04.2006 திங்கட்கிழமை காலமான எமது குடும்ப விளக்கு அமரர் குமாரசாமி கனகரட்ணம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று(24.05.2006) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
யோகரத்தினம் (மகன்),
தவேந்திரன் (சோக்கர்-மருமகன்),
கண்ணன் (பேரன்)

மாலிசந்தி,
அல்வாய் தெற்கு,
அல்வாய். (50899)(39 32 11 15)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 19 - 11 - 1945



விண்ணில் 04 - 06 - 2005

### அமரர் சின்னத்துரை சிவபாதசுந்தரம்
(ஓய்வுபெற்ற பணியாளர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)

திதி: 24.05.2006

ஆண்டு ஒன்று ஓடி மறைந்து விட்டதையா
ஆனாலும் உங்கள் நினைவுகளோ
எம் மனக்கண்ணில் நின்று
எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

பாற்சங்க ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில். — குடும்பத்தினர்.

(50453) (39-32-15-11)

**IIS**

A/L பரீட்சைக்குத் தோற்றியுள்ள மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்

விரைவில் ஆரம்பம்

விபரம் 07.06.2006 உதயனில்

இயக்குநர் IIS
இல. 100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021 222 2831

## ஏழாம் வருட நினைவில்

தோற்றம் 11 - 01 - 1981



மறைவு 24 - 05 - 1999

### அமரர் இராஜகோபால் காங்கேசன் (கங்கு)
(யா/கொக்குவில் இந்துக் கல்லூரி A/L 1999 வர்த்தகப்பிரிவு மாணவன்)

உனைச் சுமையாய்ச் சுமந்த காலங்கள்....
உதரத்தை உதைத்தது சுகமான வலிகள்...
உலகைப் பார்க்கவென உதிரம் சிந்திவந்த நொடிகள்...
உனை மார்பிலே போட்டு நாம் மகிழ்ந்த பொழுதுகள்...
மெல்லத் தலைநிமிர்த்தி... ஊன்றி நடைபழகி...
மழலை இசை பேசி.... துள்ளி நீ விளையாடி...
கலைகள் பயின்று... கல்வியில் மிளிர்ந்த
கலங்கரை விளக்கே! எம் செல்ல கங்கு !
இடைவழியில் எமைவிட்டு - நீ
எங்கேதான் சென்றாய்? சொல்!
இமைகள் மூடாது விழிகள் வழிநிற்கு - நீ!
வருவாய், வந்து மடியில் மீண்டும் தவழ்வாய்...

இல.29, சம்பியன் லேன்,
கொக்குவில். (F-49352)(21-32-15-11)

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 10 . 04 . 1927



மறைவு 24 . 04 . 2006

### அமரர் கணபதிப்பிள்ளை கனகரத்தினம்

திதி: அபரபக்க ஏகாதசி

அன்போடு எம் அருகிருந்து
பண்பாக எமை வளர்த்தீர்கள்
ஊர் போற்ற நாம் வாழ
உவகை கொண்டீர்கள்
வழிகாட்டல் போதுமென்றோ
வானுலகம் சென்றீர்கள்?

இன்று (24.05.2006) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

மனைவி: பேரின்பம், பிள்ளைகள்: அருணகிரிநாதர் (லண்டன்), மரகதவல்லி, சிவநாதன் (ஜேர்மனி), துரைநாதன், ஜெயசோதி, ஜெயலட்சுமி, திருச்செந்தில்நாதன் (மலேசியா), அருந்தவநாதன் (பிரான்ஸ்), சிவகிரிநாதன், இராஜினி.

கைதடி
நாவற்குழி தெற்கு,
கைதடி.
(50383) (39-32-15-11)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 01 - 07 - 1924



இறப்பு 24 - 04 - 2006

### அமரர் நல்லதம்பி வீரசிங்கம்

குடும்பத்தின் ஒளி விளக்காய் வாழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வமே!
ஒரு மாதங்கள் பறந்தாலும்
உங்கள் நினைவு அழியாது

இன்று (24.05.2006) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

12, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

என்றும் நீங்கா நினைவில்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 02 - 08 - 1981



இறப்பு 24 - 05 - 2005

### செல்வி அமிர்தநாதர் டொறின் ஜீவனா (தங்கா)

ஓராண்டு கழிந்து விட்டதே! எம் குலவிளக்காய் எமக்கெல்லாம் நல்வாழ்வும் வளமும் அளித்த எங்கள் அன்புத் தெய்வமே! ஆறாத்துயரில் துடிக்கின்றோம்.

3 ஆம் பிட்டி,
வெள்ளாங்குளம்,
மன்னார்.
(சு/49348) (39-32-15-11)

அன்னாரின் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள், அத்தான்மார், அண்ணிமார், மாமாமார், மச்சான், மச்சாள்மார், நண்பர், நண்பிகள்.

## வலி.கிழக்கு ஐக்கிய வாழைக்குலை விற்பனவுச் சங்கம் (வ.து) நீர்வேலி

# பதவி வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 8 ஆம் வகுப்புக்குக் குறையாத கல்வித் தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன. சங்க அலுவலகத்திற் பெறப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 2006.06.15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக “முகாமையாளர், வலி.கிழக்கு ஐக்கிய வாழைக்குலை விற்பனவுச் சங்கம், (வ.து) நீர்வேலி” என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படவேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படவேண்டும். பூரணமாக நிரப்பப்படாத, சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகள் இணைக்கப்படாத, விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். வலிகாமம் கிழக்கு பிரதேச எல்லைப் பரப்புக்குள் வதிபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலதிக விவரங்களுக்கு சங்க அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். விண்ணப்பப்படிவங்கள் நண்பகல் 12 மணி வரை சங்க அலுவலகத்தில் வழங்கப்படும்.

| பதவியின் பெயர் | சம்பளம் | வயது | அனுபவம் |
|---|---|---|---|
| 01. லொறிச் சாரதி | 3750- 5200 / 70 x 10- 75 x10 | வருடங்கள் 25 க்கும் 45க்கும் இடையில் | 03 வருடங்கள் |
| 02. சுத்திகரிப்பாளர் | 3250- 4500 / 60 x 10- 65 x10 | வருடங்கள் 20 க்கும் 45க்கும் இடையில் | 01 வருடம் |

நீர்வேலி,
24.05.2006.

சி.சுந்தரலிங்கம்,
தலைவர்.

(50400) (39-32-15-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகம் பக்கச்சார்பின்றி நடந்துகொள்ள வேண்டும்

## ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தமிழ்க் கூட்டமைப்பினர் அவசர கடிதம்

இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகம் - ஐரோப்பிய ஒன்றியம் - உண்மையான நிலைமைகளை விளங்கிக்கொண்டு - தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் புரிந்துகொண்டு பக்கச் சார்பின்றி நடந்துகொள்ளவேண்டும்.

- இவ்வாறு சர்வதேச சமூகத்திடம் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றத்தில் இலங்கை நிலைவரம் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து - அதற்குத் தமது கவலையையும் விசனத்தையும் வெளிப்படுத்தி தமிழ்க் கூட்டமைப்பின் பிரமுகர்கள் ஒன்றுகூடி ஐரோப்பிய ஒன்றியத்துக்கும், சர்வதேச நாடுகள் அனைத்துக்கும் அனுப்பிவைத்துள்ள அவசர கடிதத்திலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களின் அரசியல் வாழ்வுரிமைக்கான போராட்டத்தின் நியாயப்பாடுகள் மற்றும் சமாதான முயற்சிகளின் தார்ப்பரியங்கள் தொடர்பாக விரிவாக எடுத்து விளக்கி அந்தக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அண்மையில் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் இலங்கை நிலைவரம் சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பரிசீலித்ததுடன் அது குறித்துப் பின்வரும் கருத்துகளை வெளியிடுகின்றனர்.

✱ தமிழ் மக்களது அரசியல் அபிலாஷையான சுயநிர்ணயக் கோரிக்கையை ஸ்ரீலங்கா அரசு தொடர்ந்து நிராகரித்ததன் காரணமாக தமிழ்த் தேசத்துக்கும், ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையிலான முரண்பாடு தலையெடுத்தது. கடந்த 55 வருடங்களுக்கு மேலாகத் தமிழ் மக்கள் வடக்கு - கிழக்கில் உள்ள பாரம்பரிய வாழ்விடங்களில் தமது பொருளாதார சமூக கலாசார விழுமியங்களை அபிவிருத்தி செய்வதற்கான அரசியல் முறையொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகளை ஸ்ரீலங்கா அரசு நிராகரித்துள்ளது.

✱ ஸ்ரீலங்கா அரசு நீதியற்ற அடக்குமுறைகளைத் தமிழ் மக்களுக்கு எதிராக அமுல்படுத்தி வந்துள்ளதுடன் அரச நிர்வாகத்திலும் குறிப்பாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அவர்கள் பங்கு கொள்வதைத் தடுத்தே வந்துள்ளனர்.

✱ இந்தப் பின்னணியால்தான் தமிழ் மக்கள் சாத்வீக முறையில் பிரிந்து வாழ்வதற்கான தமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை ஆரம்பித்தனர். காலப்போக்கில் அது ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. 30 ஆண்டு காலமாக தமிழ் மக்களின் சாத்வீகப் போராட்டம் பயனற்றுப் போன நிலையில் தான் அவர்களின் தேசியப்போராட்டம் பரிணமித்தது.

✱ இந்தப் போராட்டத்தை தமிழ் மக்களின் அரசியல் இராணுவ அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ் மக்களின் சார்பில் முன்னெடுத்துச் செல்கிறது.

✱ தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தை ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் முறியடிக்க முடியாமல் போனமையாலும், தமிழ் மக்களது பாரம்பரிய பூமியில் கணிசமான பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தமையாலும் வேறொன்றும் செய்யமுடியாத கையறு நிலையில் ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டது.

✱ தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதானப் பேச்சும், ஸ்ரீலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அதிகாரச் சமநிலையின் பிரதிபலிப்பாகும். தமிழீழ விடுதலைப் புலிகளின் கடல் புலிகள் பிரிவு உட்பட்ட இராணுவக்கட்டமைப்பு இந்த அதிகாரச் சமநிலையில் அடங்கும்.

✱ இந்த உண்மைநிலையை அங்கீகரிக்கும் வகையிலும் தமிழ் மக்களின் பூரண ஆதரவு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உண்டு என்பதை நிரூபிக்கும் வகையிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து நடைபெற்ற தேர்தல்களில் தமிழர்களின் ஆணையைப்பெற்று பெரு வெற்றிபெற்றுள்ளதுடன், தமிழீழ விடுதலைப் புலிகளே சமாதானப் பேச்சு முன்னெடுப்பில் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதையும் நிரூபித்தது.

✱ சமாதான முன்னெடுப்பில் தற்போதுள்ள நெருக்கடி என்னவென்றால் தமிழீழ விடுதலைப் புலிகள், இராணுவம் மற்றும் ஒட்டுக்குழுக்களுக்கு இடையிலான தொடர்ச்சியான மோதலாகும்.

✱ வடக்கு-கிழக்கில் உள்ள ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களை யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு இணங்க களையவதற்கு மறுத்து வருவதே தற்போது நிலவும் வன்முறைகளுக்கான காரணமாகும்.

✱ கடந்த சில மாதங்களாக ஸ்ரீலங்கா படைத்தரப்பும் ஒட்டுக்குழுக்களும் இணைந்து நீதிக்குப் புறம்பான கொலைகளைத் தமிழ்ப் பிரதேசங்களில் செய்துவருவதை சர்வதேச கண்காணிப்பாளர்கள் அவதானித்துள்ளனர்.

✱ கடந்த பெப்ரவரி மாதம் ஸ்ரீலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஜெனீவாவில் சந்தித்துப் பேச்சு நடத்தியபோது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய நடந்துகொள்ள இணங்கினர்.

✱ ஆனால், ஜெனீவாப் பேச்சுகளில் இணக்கம் கண்டதற்கேற்ப இராணுவத் தரப்புக்கு எதிரான சகல வன்முறைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஸ்ரீலங்கா அரச தரப்பு ஜெனீவா இணக்கப்பாட்டுக்கு முற்றிலும் முரணாக நடந்து வருவதுடன் ஒட்டுக் குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கத் தவறியுள்ளது.

✱ தமிழ் மக்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதுடன் கொலைசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோஸப் பரராஜசிங்கத்தின் இடத்துக்கு நடாளுமன்ற உறுப்பினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நியமிக்கப்படவிருந்த வி.விக்னேஸ்வரனும் ஒட்டுக்குழுக்களால் கொலைசெய்யப்பட்டதை அடுத்து இராணுவத்துக்கும் ஒட்டுப்படைகளுக்கும் எதிரான வன்முறைகள் தலைதூக்கின.

✱ அதனால் ஸ்ரீலங்கா அரச படைகள் தமக்கு வேண்டிய பாதுகாப்பை வழங்கும் என்பதை தமிழ்மக்கள் மறந்து, தமிழீழ விடுதலைப் புலிகளே தமக்கான பாதுகாப்பை வழங்குவார்கள் என உறுதியாக நம்புகிறார்கள்.

✱ ஸ்ரீலங்கா அரசு அர்த்தமுள்ள வகையில் சமாதானப் பேச்சுகளை முன்னெடுக்கத் தவறிவிட்டது என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

✱ ஜெனீவாவில் எட்டப்பட்ட உடன்பாடுகளை அமுலாக்க ஸ்ரீலங்கா அரசு மறுத்து வருவதும், ஜெனீவா உடன்பாட்டின் பின்னர் 200இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொலைசெய்யப்பட்டிருப்பதும் -

தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சில் கலந்துகொள்ளவிடாது வேண்டுமென்றே தடைகளைப் போடுவதும் -

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுகளை நடத்த அரசு விரும்பவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

எனவே, ஒரு தரப்பினர் மீது மட்டும் குற்றம் சுமத்தி எடுக்கப்படும் நடவடிக்கை நீண்ட காலமாகப் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் தமிழ் மக்களின் சட்டரீதியான நலன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும், சிங்கள மேலாண்மைச் சக்திகளின் கரங்களைப் பலப்படுத்தும் என்பதையும், ஸ்ரீலங்கா அரசு தனது பொறுப்புகளைத் தட்டிக்கழித்து தப்பிக்க வழிசெய்யும் என்பதையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டுவதுடன் சர்வதேச சமூகத்தையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் பக்கச்சார்பற்ற முறையில் நடந்துகொள்ளுமாறும் வேண்டிக்கொள்கின்றது - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## கிரிக்கெட் பயிற்சி முகாமுக்கு வன்னியிலிருந்து 4 வீரர்கள்

வட்டக்கச்சி,மே24

இலங்கை கிரிக்கெட் சபையினரால் நடத்தப்படும் பயிற்சி முகாமிற்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து நான்கு வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.ஜெயசீலன், எஸ்.கிருபாகரன், எஸ்.றொசான், தர்மபுரம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த பேர்னாட் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தம்புள்ள விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் வடக்கு-கிழக்கு தெரிவு அணிக்கான நிகழ்விலும் கலந்துகொள்வர்.

இந்த வீரர்களைத் தெரிவுசெய்யும் நிகழ்வு கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் கடந்த 18ஆம், 19ஆம் திகதிகளில் வடக்கு-கிழக்கு கிரிக்கெட் சபை இணைப்பாளர் சண்முகலிங்கம், கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் கிரிக்கெட் இணைப்பாளரும் பயிற்றுவிப்பாளருமான அன்டீன் ஆகியோரால் நடத்தப்பட்டது. (405)

## வட்டக்கச்சியில் சிறப்புற நடைபெற்ற ஆரம்பப் பிரிவு மாணவர் விளையாட்டுவிழா

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் தொடக்க நிலை மாணவரின் மெய்வன்மைப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை சிறப்புற நடைபெற்றது.

வித்தியாலய முன்றிலில் நடைபெற்ற இந்தப் போட்டி நிகழ்வுகள் வித்தியாலய பிரதி அதிபர் திருமதி பூலட்சுமி பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையிலான மாணவர்கள் கலந்துகொண்டனர்.

முன்னதாக, விருந்தினர்கள் வித்தியாலய 'பாண்ட்' வாத்திய அணிவகுப்புடன் அழைத்துவரப்பட்டு விழா மண்டபத்தை வந்தடைந்ததும் மங்கள விளக்கினை நிகழ்வின் பிரதம விருந்தினரான கிளிநொச்சி கல்வி வலய ஆங்கில பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.தனராஜா ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை வட்டக்கச்சி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ச.திருமாறன் ஏற்றிவைக்க வித்தியாலயக் கொடியைப் பிரதி அதிபர் ஏற்றிவைத்தார். தொடர்ந்து இல்லக் கொடிகளை இல்லத்தின் பொறுப்பாசிரியர்கள் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து ஒலிம்பிக் சுடரை வித்தியால்ய உடற்கல்வி ஆசிரியர் செல்வி இ.வாணி ஏற்றிவைத்தார்.

சிறார்களின் அணிநடையைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் ஆசியுரை வழங்கி நிகழ்வினை ஆரம்பித்துவைத்தார். தொடர்ந்து சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இப்போட்டியில் 116 புள்ளிகளைப் பெற்று ஊதா நிறத்தையுடைய குளக்கோட்டன் இல்லம் முதலாம் இடத்தையும் -

97 புள்ளிகளைப் பெற்று மஞ்சள் நிறத்தையுடைய எல்லாளன் இல்லம் இரண்டாம் இடத்தையும் -

74 புள்ளிகளைப் பெற்று சிகப்பு நிறத்தையுடைய கைலைவன்னியன் இல்லம் மூன்றாம் இடத்தையும் -

73 புள்ளிகளைப் பெற்று நீல நிறத்தையுடைய சங்கிலியன் இல்லம் நான்காம் இடத்தையும் -

72 புள்ளிகளைப் பெற்று [illegible] நிறத்தையுடைய பண்டாரவன்னியன் இல்லம் ஐந்தாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (405)

## புதுக்குடியிருப்பில் நடந்த அரசியல் கருத்தரங்கில் இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் பங்கேற்பு

புதுக்குடியிருப்பு,மே 24

சமகால அரசியல் கருத்தரங்கு ஒன்று அண்மையில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெற்றது.முல்லைத்தீவு மாவட்ட மக்கள் கட்டுமானப் பயிற்சி பொறுப்பாளர் காலித் தலைமையில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.

கருத்துரைகளை 'புலிகளின் குரல்' நிறுவனம் பொறுப்பாளர் க.தமிழன்பன் (ஜவான்) முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.செம்மணன் ஆகியோர் நிகழ்த்தினர். வர்த்தகர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனப் பணிப்பாளர்கள், பொதுமக்கள் எனச் சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். (353)

## மல்லாவி, யோகபுரம் மாணவருக்கு முதலுதவிப் பயிற்சிகள் ஆரம்பம்

கிளிநொச்சி, மே24

தமிழீழ சுகாதார சேவையினரால் மல்லாவி மத்திய கல்லூரி, யோகபுரம் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் முதலுதவி வகுப்புக்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 17ஆம் திகதி புதன்கிழமை முதலுதவி வகுப்புக்களின் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி வாமன், தமிழீழ சுகாதார சேவைகளின் நடமாடும் பற்சுகாதாரப் பிரிவுப் பொறுப்பாளரும் பல்வைத்தியருமான சுதர்சன் ஆகியோர் முதலுதவி வகுப்புக்களை ஆரம்பித்து வைத்தனர்.

சுமார் 250இற்கும் அதிகமான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் முதலுதவி வகுப்புக்களில் இணைந்து பயிற்சி பெற்று வருகின்றனர்.

### கிளிநொச்சி மத்திய கல்லூரியின்

## மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு

வட்டக்கச்சி,மே24

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த 18ஆம் திகதி கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரியின்ஒழுக்காற்றுக்குழுப் பொறுப்பாசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்லூரியின் பிரதி அதிபர் எஸ்.முத்தையா முதலாவது சின்னத்தைச் சூட்டி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து ஆசிரியர்கள் சின்னங்களைச் சூட்டினர்.

சிரேஷ்ட மாணவர் தலைவனுக்கும் சிரேஷ்ட மாணவர் தலைவிக்குமான சின்னங்களை கல்லூரி அதிபர் இ.இராஜமகேந்திரனும் பிரதி சிரேஷ்ட மாணவர் தலைவனுக்கும் தலைவிக்குமான சின்னங்களைக் கல்லூரியின் பிரதி அதிபர் ப.சிறிதரனும் சூட்டி வைத்தனர்.

தொடர்ந்து புதிதாக சின்னம் சூட்டப்பட்ட மாணவர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வுடன் நிகழ்வு நிறைவுபெற்றது. (405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima, உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு:நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (சி-49296)

## அறைவாடகைக்கு தேவை

யாழ்.நகரப் பகுதிக்குள் பெண் ஒருவர் தங்குவதற்கு குளியலறையுடன் கூடிய தனி அறை தேவை. தொடர்பு: 0713213563 (50468)

## வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம், திருவேலிப்பகுதிகளில் ஒரு சிறிய கௌரவமான குடும்பத்திற்கு நல்ல சுற்றாடலில் ஓரளவான வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: மே/பா உதயன், விளம்பர இலக்கம்.2873. (50479)

## வீடுவாடகைக்கு

சகல வசதிகளுடனும் பயிர் பிரயோசனத்துடனும் சண்டிலிப்பாய் வடக்கில் வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 0777 247949 அல்லது 0773053132 (50481)

## தவறிவிட்டது

உரும்பிராய் கிழக்கு, சிவன் வீதியை முகவரியாகக் கொண்ட சின்னத்துரை செல்வராசா என்பவருடைய தேசிய அடையாள அட்டை உரும்பிராயில் தவறிவிட்டது கண்டெடுத்தோர் மங்கை ஸ்ரோர்ஸ், பலாலி வீதி, உரும்பிராய் கிழக்கு என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (50467)

மானிப்பாய் கிழக்கைச் சேர்ந்த சந்திரலிங்கம் சுஜீவன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (840553590 V) யாழ்.நகரப் பகுதிக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி : பக்கஸ் லேன், உடுவில் றோட், மானிப்பாய், தொ.பே.0777332621, 2222123. (50464)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப 1981, உத்தராடம் 2ஆம் பாதம் செவ்வாய்க்குற்றம் இல்லாத கிரகபாவம் 21½ தொழில் புரியும் மணமளுக்கு மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல.2872, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (50476)

## சண்டிலிப்பாய்க் கோட்ட அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே24

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முக்கியமான விடயங்கள் குறித்து இக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளன என்றும்-

சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறும்- கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் கேட்டுள்ளார்.

## ஆங்கில ஆசிரிய பயிற்சி அமிர்தாம்பிகை ம.வியில்

தென்மராட்சி,மே24

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு ஆங்கில ஆசிரியர்களுக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகள் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகுமெனவும்-

பண்டிதர் வேலுப்பிள்ளை நிதியத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் இப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளும் இரு பிரிவுகளைச் சேர்ந்த ஆசிரியர்களையும் அன்றைய தினம் கலந்து கொள்ளுமாறும்- வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (117)

## கண்டெடுத்த திறப்புகள்

யாழ்ப்பாணம்,மே24

இரும்புப் பெட்டகத்திற்குரிய இரண்டு திறப்புகள் (Iron Safe Keys) வீதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பித்து இலங்கை வங்கியின் மேற்தரக்கிளை முகாமையாளர் ந.சிவரத்தினத்திடம் பெற்றுக்கொள்ளலாம்.

## JAFFNA SOCIAL ACTION CENTER

JSAC

159,4th Cross Street, Jaffna. T.P. 222 3699

### Vacancy

**Vacancy for the post of Field Facilitator (Child Sector):-**

**Required Qualification**

- Education Qualification: Should be qualified A/L
- Experience in child related activities
- Very good communication skill
- Applicant should have general aptitude to work with NGO.
- Motor bike driving license

Applications should be forwarded to co-ordinator, JSAC, #159,4th cross street, Jaffna on or before 1st of June 2006

Short out list of candidates will be called for the Interview.

Co-ordinator,
JSAC. (50478)

## 9 ஆம் மாத நினைவு அஞ்சலி

மலர்வு 17-01-1962 — உதிர்வு 04-10-2005

அமரர்

### ஸ்ரீமான் சுப்பிரமணியக் குருக்கள் விசுவநாதன்

(M.Sc.1st Class)

வரணி - இடைக்குறிச்சி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், விவசாய சம்மேளனத் தலைவரும், ஐங்கரன் சனசமூக நிலையத் தலைவரும், வரணி வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவரும், தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்திச் சங்க சமாச முன்னாள் தலைவரும், சமயகுருஷம் சமூகத் தொண்டருமாகிய ஸ்ரீலஸ்ரீ கதிர்காமக்குருக்கள் சுப்பிரமணியக்குருக்களின் பாசமிகு புத்திரன் அமரர் ஸ்ரீமான்சுப்பிரமணியக்குருக்கள் விசுவநாதன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வரணி-இடைக்குறிச்சி குருக்கள் குடியிருப்பு மக்கள்,
(50462)(26.11.15) யோகாஸ் ஸ்ரோஸ் உரிமையாளர், கிராம உத்தியோகத்தர்.

## 45 ஆம் நாள் நினைவில்



தாயின் மடியில் 15 - 10 - 1981

இறைவன் அடியில் 10 - 04 - 2006

அமரர்

### குணரெட்ணம் யோகேஸ்வரி (தீபா)

அன்புள்ள தீபாவாக பண்புள்ள தங்கையாக
பாரினில் பந்தங்களுடன் பவிசாக வாழ்ந்த - நீ
பாசமுள்ள நெஞ்சங்களை மறந்து
வாழ்ந்த காலங்கள் போதும் என்றா?
இவ்வுலகை விட்டு நீங்கினாய் தீபா.

அக்காவும்
ஆருயிர் நண்பியுமான
ஆனந்தி.

மண்கும்பான் மேற்கு,
மண்கும்பான். (50466)(26.11.15)

## University of Jaffna, Sri Lanka

IRQUE Project

### Vacancies for IT Instructors (visiting)

Applications are invited from suitable persons to teach IT in an intensive (150 hours) course to be conducted at the University of Jaffna to the final year undergraduates of the Faculties of Arts and Management Studies & Commerce.

Applicants should posses a Bachelor Degree in Science or Engineering with Computer Science as one of the main subjects.

Applications should reach **" THE DIRECTOR, LTS, IRQUE PROJECT, UNIVERSITY OF JAFFNA, JAFFNA"** on or before 9th June 2006. Courses will be conducted at the Main Campus, Thirunelvely as well as at the Vavuniya Campus.

**LTS,**
**University of Jaffna.**
**22.05.2006**

**Director,**
**IRQUE Project**

## வாழ்த்துகின்றோம்



அரியாலையூர் சிற்பக்கலாநிதி.
கவின்பேரரசான்

### வ.கந்தையா

*(மணியம் மாஸ்டர்)* அவர்களுக்கு 22.05.2006 அன்று கொழும்பு ஜோன் .டி.சில்வா அரங்கில் ''கலாபூஷணம்'' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு, மேலும் பலவிருதுகள் பெற ஞானவைரவப் பெருமானை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

40/1, கலைமகள் வீதி,
அரியாலை. (504744) (39.11.15.26)

## டோகா - கட்டார் உடனடி வேலைவாய்ப்பு

| தொழில்கள் | தொகை |
|---|---|
| மேசன் | 20 |
| தச்சுவேலை | 05 |
| போர்மன் | 05 |
| லேபர் | 10 |
| எலக்ரிசன் | 05 |
| பெயின்ரர் | 05 |

தொடர்பு: 0773525742
கரன்
009745204257 (டோகா)
(சி/49362)
(21-32-11-15)

**K.Sathees Travel Agency**
**K.Sathees,**
Uduvil Road, Manipay,
Jaffna.

## அறிவித்தல்

### பூர்வாங்க அளப்பனவு ஆணை
### மாவட்ட நீதிமன்றம் - சாவகச்சேரி

வழக்கு இலக்கம் 7179/ பிரிவிடல்

மேற்படி வழக்கில் அருளப்பா ஈஸ்வரதேவன் உத்தரவு பெற்ற நில அளவையாளராகிய நான் மேற்படி நீதிமன்றினால் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளேன். எனவே 2006-06-07 ஆம் திகதியும் அதனைத் தொடர்ந்து வரும் நாள்களிலும் 1977ஆம் ஆண்டு 21ஆம் இலக்கப் பிரிவிடல் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி பின்னால் விவரிக்கப்படும் ஆதனம் என்னால் அளப்பனவு செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### ஆதனடாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்றிக், தென்மராட்சிப் பகுதி, வரணிக்கோயிற்பற்று, கரம்பைக் குறிச்சியிறை ''விலங்கிராவி'' உறுதிப்படி நிலப்பரப்பு 11, தற்போது இக் காணியின் விசாலம் நிலப்பரப்பு 15. பதினைந்திற்கு தற்பொழுது எல்லை கிழக்கு வேலாயுதர் பெண் செல்லம்மாவிற்கு உரிய ஆதனம். வடக்கு வேலுப்பிள்ளை வேலாயுதபிள்ளைக்குரிய ஆதனம். மேற்கு தற்பொழுது ஒழுங்கை தெற்கு சிதம்பரப்பிள்ளை வல்லிபுரத்திற்குரிய ஆதனம். இவ்வெல்லைக்குள்ளடங்கிய நிலம், பனைகள், தென்னைகள் அடங்கலும்.

(50475)
(26.11.15)

அ.ஈஸ்வரதேவன்,
நீதிமன்ற ஆணையாளர்.

## 31 ஆம் நாள் வீட்டுக்கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

### சதாசிவம் சின்னராசா

(ஓய்வு பெற்ற மக்கள் வங்கி உத்தியோகஸ்தர்)

*தோற்றம் 28.06.1941 — மறைவு 25.04.2006*

25.04.2006 இல் சிவபதம் அடைந்த எமது அன்புத் தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவி புரிந்து இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி, தந்தி, மலர்வளையங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் ஏனையோருக்கும் எமது நன்றிகள்.

நாளை (25.05.2006) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அனைவரிடமும் வேண்டுகின்றோம்.

*நாட்டுச் சூழ்நிலை காரணமாக இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

190 ஆம் கட்டை,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(50473) (39.11.15.26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறாவது நெஞ்சகலா நினைவஞ்சலி



விழிப்பு 06 . 11 . 1957 — உறக்கம் 24 . 05 . 2000

**செல்வி சசிகலா சுப்பிரமணியம்**

**(முன்னாள் சிறாப்பர், பிரதேச செயலகம், சாவகச்சேரி)**

*(திதி: வைகாசி அபரபக்க சஷ்டி)*

*ஆண்டு பல கடந்தாலும் ஆறாது துயரம்.*
*அணையாது நினைவு.*
*ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்*

*'கிளுவானை ஒழுங்கை'*
*கோப்பாய் மத்தி, கோப்பாய்.* (50480) **- குடும்பத்தினர்.**

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 01 - 09 - 1931 — மறைவு 13 - 04 - 2006

**அமரர் தம்பையா இரத்தினசபாபதி**

(ஓய்வுபெற்ற பொலீஸ் அத்தியட்சகர்)

*எம்மை தோளிலும் மார்பிலும் தூக்கி*
*பாசத்தைக்காட்டி அன்புடன்*
*அரவணைத்த ஐயாவே!*
*நீங்கள் எம்மைவிட்டு நீங்கி*
*நாற்பத்தொரு நாளென்ன -*
*நாற்பத்தொராயிரம் ஆண்டுகள் சென்றாலும்*
*உங்கள் நினைவுகள் என்றும்*
*எம் மனதை விட்டு அகலாது.*

***அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (25.05. 2006) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறுகின்றன. அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து, ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.***

குறிப்பு : நாட்டுச்சூழல் காரணமாக நேரில் வந்து கூற முடியவில்லை. எனவே, இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரும் வரும்படி தயவாக அழைக்கின்றோம்.

*'செல்வ பவனம்'*
*துல்லாரை தெற்கு, மீசாலை.* (50487) **மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


## ஜயோதா

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6638170 முதல் 6647557 வரை. சீட்டிழுப்பு இல. 238 திகதி 22-05-2006

### வெற்றி எண்கள்

**4 7 2 9 0 3** சுப்பர் எண் **16**

ஜக்பொட் பரிசு ரூ. **10,000,000/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 10,000,000/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 81 | 5,000/= | 405,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 825 | 500/= | 412,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8238 | 50/= | 411,900/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 81639 | 10/= | 816,390/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 07 | 5,000/= | 35,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 85 | 1,000/= | 85,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 830 | 100/= | 83,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8162 | 20/= | 163,240/= |
| | | மொத்தம் ரூ. | 3,862,030/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **4,464,630/-**

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 6644466-4-52 |
| மாத்தளை | 6641775-7-32 |
| கொழும்பு | 6640424-6-07 |
| பொலன்னறுவ | 6646400-0-04 |
| காலி | 6638492-6-10 |
| பதுளை | 6642309-4-00 |
| கம்பஹா | 6644809-5-69 |
| களுத்தறை | 6638340-0-04 |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 10,229,075/-

தொடர் இல. 7551264 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 மே 25 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


## விஞ்ஞான பீட மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்,மே24

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மீண்டும் ஆரம்பமாகும் என யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

கடந்த 8ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்ட கற்றலின் போது மதிப்பீடு செய்யும் பரீட்சைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறும் என்றும் பதிவாளர் அறிவித்துள்ளார்.



**யாழ்ப்பாண பல்கலைக்கழகம் - இலங்கை**
**முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்**
**இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் - 2005**
**இரண்டாம் அரையாண்டு மீள்பரீட்சைகள் -2005**
**(பழைய பாடத்திட்டம்)**

**எமது பீடத்தைச் சேர்ந்த முதலாம், இரண்டாம் வருட மாணவர்களுக்கான தடைப்பட்ட மேற்படி பரீட்சைகள் பின்வரும் திகதிகளில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெறும்.**

*இரண்டாம் வருடப் பரீட்சைகள் -30.05.2006 செவ்வாய்க்கிழமை*

*முதலாம் வருடப் பரீட்சைகள் -05.06.2006 திங்கட்கிழமை*

திருத்தப்பட்ட நேர அட்டவணையை மாணவர்கள் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட அறிவித்தற்பலகையில் பார்வையிடலாம்.

✱முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட இறுதி வருட மாணவர்களுக்கான ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 31.05.2006 புதன்கிழமை.

(சி-49371) **- பதிவாளர்.**

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 08 - 12 - 1951 — மறைவு 10 - 04 - 2006

**அமரர் சண்முகரட்னம் காந்தா பத்மநாபன்**

**சீரோடும் சிறப்போடும் எம்மை வாழவைத்து இவ்வுலகில் வெண்மதியென சேவையில் மிளிர்ந்து பேரோடும் புகழோடும் பூவுலகை நீத்து விண்ணுலகம் நோக்கிச் சென்ற எம் அப்பவே! உங்கள் ஆத்மா பேரொளியில் கலந்து பரமானந்த நிலையில் இருக்க எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றோம்.**

10.04.2006 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவனின் மறைவுச் செய்தி கேட்டு தொலைபேசி, தந்தி மூலமும் நேரிலும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மலர்வளையம் சாத்தியோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைத்து நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அயலவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (24.05.2006) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் வீட்டில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*74, குருசோ வீதி,*
*சுண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி. 021 4590006.* (50482) **- குடும்பத்தினர்.**


**ராஜா** யாழ்ப்பாணம்

விஜய், திரிஷா நடித்த
**திருப்பாச்சி**
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

**நாதன்ஸ்** சினிமா யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும்
கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜக்சனின்
**கிங் - கொங்** King Kong
தங்கத் தமிழ் மொழியில்
காட்சி நேரம் : 10.30, 2.30


# மரண அறிவித்தல்கள்

## நடராசா சுந்தரலிங்கம்



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சுந்தரலிங்கம் 18.05.2006 அன்று ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் நடராசா - சிந்தாமணி தம்பதியரின் மகனும் சீதாலட்சுமி (நேசம்மா), சண்முகலிங்கம், காலஞ்சென்ற சங்கரலிங்கம் (சற்குணம்), மகேஸ்வரி, பஞ்சலிங்கம் (சிவராசா), இரத்தினலிங்கம் (மணியம் - ஜேர்மனி), தனலட்சுமி (வசந்தி - கனடா) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற நடராசா பூங்காவனம், காலஞ்சென்ற கனகராசா அழகரத்தினம் (சின்னராசா) ஆகியோரது மருமகனும், பரராஜசிங்கம், நவமணி ஆகியோரின் மைத்துனனும் மனோன்மணியின் பாசமிகு கணவரும் சுதர்சினி, சுபாசினி, சுரேஸ்குமார் (லண்டன்), சுந்தர்ராஜன் (சுதன்), சுமித்திரா, சுவேந்தினி ஆகியோரது தந்தையும் சிவலிங்கம் அவர்களின் மாமனாரும் சந்துஜா, தாரணி ஆகியோரது பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் உள்ள அவரது வசிப்பிடத்தில் இன்று (24.05.2006) புதன்கிழமை ஜேர்மன் நேரப்படி 2 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலட்டி ஒழுங்கை,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (50477) தகவல்: **குடும்பத்தினர்.**

## திருமதி இராஜேஸ்வரி கணபதிப்பிள்ளை

**(ஓய்வுபெற்ற ஆசிரியை)**



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி கணபதிப்பிள்ளை அவர்கள் 22.05.2006 அன்று காலமானார்.

அன்னார் முருகேசு கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் பாலபரமேஸ்வரன் (நீர்வேலி), ரஞ்சினி வரதராஜன் (ஆசிரியை, தம்பலகாமம் - திருகோணமலை), பரமநாதன் (பகலவன் போட்டோ, கோண்டாவில்), ஸ்ரீதரன் (ஆசிரியர், செல்வநாயகபுரம் - திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயும் சறோஜினிதேவி, காலஞ்சென்ற வரதராஜன், ஜெயந்தினி, சறோஜினி ஆகியோரின் அன்பு மாமியும் சுகன்ஜா, ஜீவதன், பகலவன், நிதர்ஜா, சகானா, ஜரண்ஜா, நிதர்சன், நிதர்காந், நிதர்மிலா, யதுர்ஷன், ஆயிதாஸ் ஆகியோரின் பேர்த்தியும் தர்நிஷனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.05.2006 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (சி-49367) தகவல்: **குடும்பத்தினர்.**

## பொன்னுத்துரை முரளீதரன்



பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் இல.460/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை முரளீதரன் (பபா) 22.05.2006 திங்கட்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் பூமணியின் (சின்னம்மா) அன்பு மகனும் சின்னத்துரை - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் கலாநிதியின் அன்புக் கணவரும் மயூரன் (மாணவன், தரம் 4, யாழ்.பரியோவான் கல்லூரி) இன் பாசமிகு தந்தையும் ரவீந்திரன் (எழுதுநர், யாழ். போதனா வைத்தியசாலை), கௌசல்யா (வவுனியா), பிரபாகரன் (பிரபா பார்மசி), கெங்காதரன் (பிரான்ஸ்), யசோதரா (ஆசிரியை,யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அன்னபூரணி, தயாநிதி, வரதராஜா (ஆசிரியர் - கொழும்பு), செல்வராஜா, கமலாநிதி (இத்தாலி) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.05.2006) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*இல. 460/5,நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* தகவல்: **மனைவி.**

## கந்தர் சின்னத்துரை (ஜெயப்பிரகாசம்)

(இளைப்பாறிய ஆசிரியர் - J.P.)



ஒட்டுமடம், வெள்ளாந்தெருவைப் பிறப்பிடமாகவும் வண். வடமேற்கு ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட கந்தர் சின்னத்துரை (ஜெயப்பிரகாசம்) 23.05.2006 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு திருமதி கந்தர் தம்பதியரின் அன்பு மகனும் நாகரத்தினத்தின் அன்புக் கணவனும் ஸ்ரீரஞ்சிதம் (ஜேர்மனி), ஸ்ரீஸ்வரானந்தர் (அமெரிக்கா), ஸ்ரீ ரமஸ்ீஸ்வரி (கனடா), ஸ்ரீ ஜோதீஸ்வரானந்தர் (ஆனைக்கோட்டை), ஸ்ரீஜெகதீஸ்வரானந்தர் (சுவிஸ்), ஸ்ரீ இராஜேஸ்வரானந்தர் (சுவிஸ்), ஸ்ரீ கலாறஞ்சிதம் (கனடா) ஆகியோரின் அன்பு த் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2006) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை வீதி,*
*வண்.வடமேற்கு,*
*ஆனைக்கோட்டை.* (50484) தகவல் **சி.ஜோதி (மகன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகள் கண்டனம்

திருகோணமலையில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் பலத்த கண்டனம் தெரிவித்திருக்கின்றனர். பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து இழப்பதற்கு எதுவும் அற்ற நிலையில் இருக்கும் தமிழ் மக்களுக்கு சிறுவகையிலாவது ஒரு ஆறுதலாக இந்த தன்னார்வத் தொண்டர் அமைப்புகளே இருந்து வருகின்றன.

இந்த நிலையில் அந்த நன்மைகள் கூட தமிழ் மக்களுக்குக் கிடைக்க முடியாத வகையில் தன்னார்வத் தொண்டர் அமைப்புகளின் சேவைகளை முடக்கும் நோக்கத்துடனேயே இந்தத் தாக்குதல்கள் இடம் பெற்றுவருகின்றன - என்று விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் பொன்னம்பலம்



மாணிக்கவளவு கரணவாய் தெற்கு கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பொன்னம்பலம் (21.05.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (24.05.2006) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடை பெற்று தகனக்கிரியைக்காக பூவரசம்திட்டி மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*மாணிக்கவளவு,*
*கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி*
*தொ.பே. 0777 412752*

(50501)

தகவல்:
**பொ.பார்த்தீபன்**
**(ஆசிரியர்)**

### யோசப் அமிர்தநாயகம் அன்னம்மா

கரவெட்டி, கரணவாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் அமிர்தநாயகம் அன்னம்மா அவர்கள் நேற்று (23.05.2006) செவ்வாய்க்கிழமை மதியம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசப் அமிர்தநாயகத்தின் அன்பு மனைவியும் மாகிறேட் மெலனியின் அன்புத் தாயும் அன்ரன் செல்வராசாவின் மாமியும் அலோயிஸ் பவன்ராஜின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற எதிர்வீரசிங்கம், திருமதி நீக்கிலாப்பிள்ளை மாரிமுத்து, திருமதி போல் செல்வராணி, செல்வரட்ணம்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி எதிர்வீரசிங்கம் மரியம்மா,திருமதி செல்வரட்ணம் றீற்றா, காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை, போல் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் அவரின் இல்லத்தில் இன்று (24.05.2006) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கரவெட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரணவாய் கிழக்கு,*
*கரவெட்டி.*

(சி/49381)

தகவல்:
**ச.அன்ரன் செல்வராசா**
***(மொடோன் ஸ்ரோர்,நெல்லியடி)***

### திருமதி பஞ்சாட்சரம் பரமேஸ்வரி
*(சுப்பிரமணியம்)*



பஞ்சாட்சரம் பரமேஸ்வரி அவர்கள் நேற்று (23.05.2006) செவ்வாய்க்கிழமை கால மாகிவிட்டார்.

அன்னார் ஓய்வுபெற்ற சிறைச்சாலை ஊழியர் காலஞ்சென்ற பஞ்சாட்சரத்தின் (சுப்பிரமணியம்) மனைவியும் சோதி நாதன் (லண்டன்), காலஞ்சென்ற யோகராசா, சிவநாதன்(செல்வம்), சிவானந்தன்(ஜீவா - லண்டன்), சிவகுமார்(சாந்தன் - லண்டன்), திருமதி புஸ்பகெளரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

***54/11,சந்தன மாதா கோயில் முன் ஒழுங்கை***
***பாண்டியன்தாழ்வு, கொழும்புத்துறை.*** (சி/49379)

தகவல்:
**பிள்ளைகள்**

### திருமதி பாலசுப்பிரமணியம் இராசலக்சுமி
*(மம்மி)*



சாவகச்சேரி, கோவிற்குடியிருப்பைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் இராசலக்சுமி 21.05.2006 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (சேமன், நகரசபை சாவகச்சேரி) அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2006) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***விநாசித்தம்பி வீதி,***
***சாவகச்சேரி.***

(50502)

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்.**

### பளையில் திங்களன்று போராளி வீரச்சாவு

பளைப் பகுதியில் நேற்றுமுன்தினம் தவறுதலாக இடம்பெற்ற வெடிவிபத்தில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார். வீரவேங்கை சோழன் (தம்பிராசா திருச்செல்வம் - யாழ்ப்பாணம்) என்பவரே வீரச்சாவடைந்தவராவார். இவரது வீரவணக்க நிகழ்வு இன்று பி.ப. 2 மணிக்கு பளையில் இடம்பெறும்.

## ஐரோப்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை எரிக் சொல்ஹெய்ம் சந்தித்துப் பேசுவார். இம்முறை அவர் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்க மாட்டார். - என்றார் போவர். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக் ஸன் நோர்வேக்கு வந்திருக்கிறார் என்பதை போவர் உறுதிப் படுத்தினார்.

நோர்வே அரசின் அவசர அழைப்பின் பேரிலேயே அவர் அங்கு வந்தார் என வெளி வந்த செய்திகளை போவர் மறுத்தார்.

இலங்கையின் கள நிலைவரம் குறித்து ஆறு மாத காலத்துக்கு ஒரு தடவை கூடி ஆராயும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழமையான ஒரு சந்திப்புக்காகவே உல்ப் ஹென்றிக்ஸன் நோர்வேக்கு வந்தார் என்கிறார் ஜோன் ஹன்ஸன் போவர்.

## கழுத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.

கூரிய ஆயுதம் ஒன்றினால் கழுத்து வெட்டப்பட்டதில் அதிகளவு இரத்தம் வெளியேறி வாலிபர் மரணமாகியுள்ளார் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.(15-86)

## தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


திக் கூறிய ஐ.தே.க. தலைவர், அரசும், புலிகளும் அதனைப் பேணி நடக்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

தமிழர்கள் மீது தொடர்ந்து அடக்குமுறைகள் இடம்பெறுவதானது சர்வதேச ரீதியில் இலங்கைக்கு ஒரு அவப்பெயரை உண்டாக்குமென்றும் சுட்டிக்காட்டிய ஐ.தே.க. தலைவர், இது தமிழர்களை தனிநாடொன்றுக்கே இட்டுச்செல்லுமென்று கூறினார். (க)


### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட **Original Prima Broilar** குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 25.05.2006 வியாழக்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, கரன் - ஆலடி; உடுவில், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, நல்லூர் பாம் சென்ரர் - #19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

### STUDY & WORK IN USA




Free Seminar at 12 noon, 2 pm and 4 pm by Dr. Daniel Howard, Vice President, UNA, on Mon, 29th May at Hotel Taj Samudra, Colombo. Interested students are invited to attend. Preliminary offer letters will be given to students who meet entry requirements and bring all their documents.

**The UNA Advantage :** • State Owned University • 176 years old • Selected as a "Best Buy in Higher Education" due to quality education at an affordable price • Listed as one of" America's Best Colleges" • One of the safest campuses in the US • One of the first universities in USA among over 4,000 institutions • 16 years of Education not mandatory for MBA. • Annual career fairs on campus.

**Programs Offered :** MASTER'S : MBA (with a choice of specializations), Health Promotion & Human Performance.
BACHELOR'S : Business, Accounting, Computing, Economics, Finance, Broadcast Journalism, Nursing, Health, Psychology, Music, Entertainment Media Production, Public Relations, Radio- Television Film, Theatre and many more.

Authorised Counselling Centre:
1st Floor, 125 High Level Road, Nugegoda.
Tel : 011 - 2768700 Mobile : Renata - 0773508009
Vibhu - 0777715987, Email id: wickrama@eureka.lk

Admissions open for August 2006 intake !


## சர்வ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தச் சந்திப்பு இடம்பெற்றது.

அரச படைகளால் தமிழர் தாயகப் பிரதேசங்களில் - குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் - பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தாக்குதல்கள், வன்முறைகள் குறித்து இந்தச் சந்திப்பில் தமிழ்ச்செல்வன் சர்வமதத் தலைவர்களுக்கு விளக்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் போர் ஏற்படுவதைத் தவிர்த்து அமைதி முயற்சிகளில்ஈடுபட விடுதலைப் புலிகளையும் அரசையும் வலியுறுத்தும் நடவடிக்கைகளில் தாங்கள் ஈடுபடப் போகின்றார்கள் என்றும் - இதன் அடிப்படையிலேயே தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பு இடம்பெற்றது என்றும் சர்வ மதத் தலைவர்கள் தெரிவித்தனர். (க)


### மக்கள் வங்கி அறிவித்தல்
#### மீட்கப்படாத நகைகள் பகிரங்க ஏல விற்பனை

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.12.2004 இற்கு முன்னர் அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளைகளில் கடந்த வைகாசி மாதம் 12ஆம், 13ஆம், 14ஆம், 15ஆம், 16ஆம் திகதிகளிலும் நெல்லியடிக் கிளையில் 14ஆம் திகதியும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவிருந்தது. தற்போது இவ் பிற்போடப்பட்ட ஏல விற்பனை பின்வரும் திகதிகளில் நடத்தப்படும்.

| திகதி | ஏல விற்பனை நடைபெறும் இடம் |
|---|---|
| 03.06.2006 - சனி<br>04.06.2006 - ஞாயிறு<br>05.06.2006 - திங்கள்<br>10.06.2006 - சனி | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |
| 11.06.2006 - ஞாயிறு | நெல்லியடிக்கிளை |

**வங்கிக்கிளைகள்:**

யாழ். ஸ்ரான்லி வீதி, காங்கேசன்துறைக் கிளை, யாழ். பிரதான வீதி, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ். பல்கலைக்கழகம், யாழ். கன்னாதிட்டி, பருத்தித்துறை மற்றும் நீடித்த கரும பீடங்களான மானிப்பாய், உரும்பிராய், மல்லாகம், திருநெல்வேலி, இணுவில்.

*பிராந்திய முகாமையாளர்,*
*மக்கள் வங்கி, பிராந்திய தலைமையகம், யாழ்ப்பாணம்.*


## மரண அறிவித்தல்

### திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்

மயிலணி, சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் (பரமேஸ்வர ஆலய நம்பிக்கை நிதியத் தலைவரும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினரும், மயிலணி கந்தசுவாமி கோயில் அறங்காவலர் சபைத் தலைவரும் யா/இராமநாதன் கல்லூரியின் முன்னாள் அதிபரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் உப அதிபரும்) அவர்கள் நேற்றுமுன்தினம் (22.05.2006) திங்கட்கிழமை மாலை 7.45 மணியளவில் கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சி.க.திருச்சிற்றம்பலம்(முன்னாள் தலைவர் - சங்கானை பட்டின சபை, பணிப்பாளர் - பொதுமுகாமையாளர், ஈழநாடு, ஸ்தாபக பொது முகாமையாளர் - உதயன்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற அதிபர் முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை - கமலாம்பிகை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் சிவசோதி (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி), குமாரசாமி (ஓய்வுபெற்ற கணக்காய்வாளர், கடதாசிக் கூட்டுத்தாபனம்), காலஞ்சென்ற சந்திரசேகரன் (சட்டமா அதிபர் திணைக்களம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் துரைசிங்கம் (ஓய்வுபெற்ற சிரேஷ்ட வரி அலுவலர்), பரமேஸ்வரி, இராஜேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற சண்முகநாதன் (படவரைஞர்), திருமதி பிரேமா சண்முகநாதன் (ஆஸ்திரேலியா), நாகபூஷணி இலங்கநாதன், பொன்னம்பலம் - ரதி (பிரான்ஸ்) தம்பதியரின் மைத்துனியும் வாகீசன், ரமேஸ் (பிரான்ஸ்), காயத்திரி (ஆஸ்திரேலியா), அனோஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியதாயும் யமுனா திருலிங்கம் (ஆஸ்திரேலியா), யானகி (ஆஸ்திரேலியா), குமரன் (பொறியியலாளர், லண்டன்), றமணன் (லண்டன்), ஜயந்தி (ஆசிரிய மாணவி, மகரகம ஆங்கில ஆசிரிய கலாசாலை) ஆகியோரின் மாமியும், குகன், கஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரினதும் வழக்கறிஞர் தி.குமாரசுவாமியினதும் (J.P), (ஸ்தாபகர், மயிலணி சைவ ம.வி.) பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (25.05.2006) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு பிற்பகல் 2.30 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'புலவரகம்'*
*மயிலணி,*
*சுன்னாகம்.*
*0712520843*

(சி/49382)

தகவல்:
**சி.க.திருச்சிற்றம்பலம்**
(கணவர்)






இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org